
COMICS PDF TIMES
நைல் நதியில் ஒரு கொலை
தமிழில்
பிரசன்னா ஸ்ரீதர்
அகதா கிறிஸ்டி

COMICS PDF TIMES
வெளியிடு எண் 60

தமிழாக்கம்
எழுத்துருக்கள்
&
சிறப்பு சத்தங்கள்
திரு பிரசன்னா ஸ்ரீதர்
பிழை
திருத்தியவர்கள்
திரு K.V கணேஷ்
திரு பூபதி
திரு வீரபாண்டியன்
ஒருங்கிணைப்பு
சுரேஷ் சந்த்

ரசிகர்களுக்காக ரசிகர்கள் மொழி பெயர்த்து தனிப்பட்ட முறையில் பரிமாற்றம் செய்யப்படும் ஒன்றே தவிர இது விற்பனைக்கல்ல. இதன் மூலம் எவ்வித வணிக லாப நோக்கமும் கிடையாது. இந்த மொழி பெயர்ப்பை சுய தேவைக்காக வணிக முயற்சிகளில் ஈடுபடுத்துபவர்களுக்கும் இதன் மூல படைப்பாளிகளுக்கும், இதை தமிழில் மொழி பெயர்த்தவர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இதன் மூல படைப்பாளிகளை ஊக்குவித்து மேலும் படைப்புகளை படைக்கவும், இந்த தமிழ் மொழி பெயர்ப்பு முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிக்க நினைத்தாலும் இதை புத்தகமாக வாங்குவதே அவர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு. மேலும் இந்த புத்தகமானது முறையான உரிமம் பெற்று தமிழிலும் புத்தகமாக வரும் வேளையில் அதனை வாங்கி பதிப்பாளர்களுக்கு உங்கள் ஆதரவை நல்கிடுங்கள்.


லண்டனின் மேற்கு பகுதியில் உள்ள எலிகண்ட் ரெஸ்டாரண்ட், 1930
COMICS PDF TIMES
என்னையா? மேனேஜர் பதவிக்கா? உனக்கு சரிப்பட்டு வருமா?
எல்லாம் சரியாக இருக்கும், சைமன் டார்லிங்! நீங்கள் சரி என்று ஒரு வார்த்தை மட்டும் சொல்லுங்கள், என் தோழி லின்நெட் ரிட்ஜ்வே ஒரு பெரிய எஸ்டேட் வைத்திருக்கிறாள், நீங்கள் மீண்டும் சம்பாதிக்க தொடங்க வேண்டும்.
பிறகு நம்முடைய திருமணம், அப்படித்தானே ஜாக்கி?
எதை பற்றியும் யோசிக்காமல் சரி என்று சொல்லுங்கள், நான் நேற்றே லின்நெட்டிற்கு தகவல் கொடுத்து விட்டேன், அவளும் சரி என்று சொல்லிவிட்டாள்.
ஆனால், எனக்கு இப்பொழுது ஒரு மேனேஜர் அவசியமே இல்லையே.
அவர் வேலையை இழந்து தவிக்கிறார், உன்னுடைய உதவி எனக்கு தேவை லின்நெட்.
எனக்காக இந்த உதவியை செய், அவரை நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும், அவர்தான் எனக்கு எல்லாம் !
இதற்கு மேல் நான் சொல்ல என்ன இருக்கிறது! நீ உன்னவரை கூட்டிக்கொண்டு இங்கே வா, நான் முதலில் அவரை பார்க்க வேண்டும்.
உங்களுக்கு வேலை கிடைத்த மாதிரியும் ஆச்சு, நாம் நம்முடைய தேனிலவை எகிப்தில் கழித்த மாதிரியும் ஆச்சு!...
ஒவ்வொரு முறையும் நீ என்னை ஆச்சர்ய பட வைக்கிறாய்!
ஒஹ்! எகிப்து...
எனக்கு இந்த உலகில் உங்களை மிஞ்சி வேறெதுவும் இல்லை, சைமன் டார்லிங்.
ஆனால் நீ அவரை அளவுக்கு அதிகமாகவே காதலிக்கிறாய் பெண்மணியே...



எகிப்து...
ஆஸ்வான் படகுத்துறை...
டிம்! சீக்கிரம் இதை வந்து பாருங்கள், புகழ் பெற்ற டிடக்டிவ் ஹேர்க்யூள் பாய்ராட் வந்து கொண்டு இருக்கிறார்!
இந்த மூக்கு வேர்த்த கழுகு இங்கே என்ன செய்கிறது?
மாம்! அந்த பைனாகுலரை கொஞ்சம் என்னிடம் கொடுங்கள்.
அதோ கூடவே லின்னெட் ரிட்ஜ்வே, என்ன ஒரு அழகு, கூடவே நிறைய பணமும்!
நிஜமாகவா? உனக்கு அவளை தெரியுமா?
எனக்கு எப்படி தெரியும், அவள் ஜோவானாவிற்கு தான் தோழி, ஊரில் உள்ள பத்திரிக்கைகளில் எல்லாம் அவளுடைய திருமணத்தை பத்திதான் ஒரே பேச்சு, அவளுடைய கணவனின் பெயர் கூட ஏதோ....
அது லின்னெட் ரிட்ஜ்வேயும் அவரது கணவர் சைமன் டாயலும், அந்த மனிதர் இங்கிலாந்திலேயே ஒரு பணக்கார பெண்ணாக பார்த்து திருமணம் செய்து கொண்டுள்ளார் மிஸ்டர். பாய்ராட்.
நான் அந்த ஆளை எங்கேயோ பார்த்து இருக்கிறேன்... எங்கே?
அழகும் செல்வமும் அவளிடம் கொட்டிக் கிடக்கிறது...
ஐ ஹேட் ஹெர்!!
2


மின்னும் அனைத்து விஷயமும் பொன் கிடையாது... மேடம், அந்த பெண்மணியின் நடவடிக்கையை கவனிக்கும் பொழுது அவளிடம் ஒருவிதமான பதட்டம் தெரிகிறது!
எனக்கு பொறாமை என்று சொல்லாமல் சொல்கிறீர்கள், பரவாயில்லை, எனக்கு அவளை ஏனோ சுத்தமாக பிடிக்காது!
ஏதோ ஒரு விஷயம் அவள் மனதை அரித்து கொண்டே இருக்கிறது! அவள் சந்தோஷமாக இல்லை!
ரோசலி!
?
என் அம்மாவிற்கு நான் இல்லாமல் கையும் ஓடாது, காலும் ஓடாது, பிறகு நாம் எப்பொழுது இந்த ஒற்றை விட்டு கிளம்ப போகிறோம்!
சீக்கிரமாகவே, நாம் நைல் நதியின் ஓட்டத்தையும் அதனை சுற்றியுள்ள இயற்கையின் அழகையும் கண்டு களிக்க கிளம்ப வேண்டும்.
நீங்கள் கிளம்புவதற்குள் உங்களுடைய கையெழுத்து எனக்கு நிச்சயம் வேண்டும் மேடம் லின்நெட்.
புரிகிறது மிஸ்டர். பெனிங்டன், என்னுடைய திருமணம் இப்பொழுது தான் முடிந்தது, அதனால்...
என்னை மன்னித்து விடுங்கள் மேடம் லின்நெட், உங்கள் தேனிலவில் இவ்வளவு தொந்தரவு கொடுப்ப-தற்கு.
எல்லாம் வெறும் காகிதங்கள், இருந்தாலும் தொழிலாச்சே!


என்ன ஒரு அருமையான மாலை பொழுது!
நான் வெகுநாட்களாக எதிர்பார்த்த ஓய்வு எனக்கு என்று தான் கிடைத்திருக்கிறது!
என்ன இது எகிப்தின் சீதோஷ்ன நிலையில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டு விட்டதா, அங்காங்கே சோகமே உருவெடுத்து சிலபேர் இருக்கிறார்கள், இதோ இங்கே இன்னொரு பெண்!
ஹிஸ்ஸ் ! ஹிஸ்ஸ் !
நான் ரெஸ்டாரெண்டில் பார்த்த அதே பெண், அப்படியென்றால் நான் அந்த சைமனை அங்கே இந்த பெண்ணுடன் தான் பார்த்தேன்!
சைமன்! லின்நெட்! என்ன ஒரு ஆச்சர்யம்! உலகம் ரொம்பவே சின்னது, அதனால் தான் நாம் அடிக்கடி சந்திக்கின்றோம் போல!
ஐயோ!! நீயா!!
டார்லிங், வா நாம் போகலாம்!
நீ செய்வது கடவுளுக்கே அடுக்காது, தயவுசெய்து எங்களை நிம்மதியாக இருக்க விடு, உன் விளையாட்டை இத்துடன் நிறுத்திக்கொள்!
என்னவாக இருக்கும்?
என்னுடைய யூகம் சரிதான், அவள் சைமனை அளவுக்கு அதிகமாகவே காதலித்து விட்டாள்.
மிஸ்டர் பாய்ராட்! இந்த அருமையான மாலை நேரத்தில், எங்களுடன் சேர்ந்து ஒரு கப் தேநீர் அருந்துங்கள்!
?


மேடம் ஓட்டர்போர்ன், உங்களுக்கு விஸ்கி வேண்டுமா?
அதை கண்டாலே எனக்கு பிடிக்காது, ஒரு கிளாஸ் லெமோனேட் மட்டும் போதும்!
அப்புறம் மேடம், உங்களுடைய புதிய நாவல் எப்படி வந்து கொண்டு இருக்கிறது?
CUTTY SARK
மிகச்சிறப்பாக! தலைப்பு கூட யோசித்து விட்டேன் “பனியில் ஒரு பாலைவனம்” பனி மற்றும் பாலைவனம் இரண்டும் இரு துருவங்கள், இரண்டும் சேரும்போது ஏற்படும் கலவரமே கதை, நினைத்தாலே பிரம்மிப்பாக இருக்கிறது தானே!
?
?
?
!?!
லின்நெட்! சொன்னால் கேள், அவளை கண்டு கொள்ளாதே!
என்ன ஒரு அகம்பாவம்!
என்னால் இனிமேலும் பொறுத்துக்- -கொள்ள முடியாது!
எக்ஸ்கியுஸ் மி சார்! நீங்கள் தானே புகழ் பெற்ற துப்பறிவாளர் ஹேர்க்யூள் பாய்ராட், என்னுடன் கொஞ்சம் வர முடியுமா, நான் உங்களிடம் தனிமையில் சில விஷயங்களை பேச வேண்டும்!
நிச்சயமாக மேடம், இதோ சிறிது நேரத்தில் வருகிறேன்...



COMICS PDF TIMES


ஆஸ்வான். அடுத்த நாள் காலை
குட் மார்னிங் மிஸ்டர். பாய்ராட், உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் நானும் உங்களுடன் நடக்கலாமா?!
வாருங்கள்!
அவள் இப்படி ஏதாவது செய்வாள் என்று எனக்கு முன்னமே தெரியும், ஆனால் இப்படி எங்கே சென்றாலும் பின்தொடர்ந்து வருவது சுத்த அநாகரிகமான செயல்.
நேற்று மாலை, அது.... உங்களால் ஜாக்கியை சமாதானம் செய்ய முடிந்ததா?
என்னால் அவ்வளவு உறுதியாக சொல்ல முடியவில்லை மிஸ்டர். டோயல்
ஆனால் ரொம்பவே புத்திசாலிதனமான செயல்... பழி வாங்குவதில் புதிய யுக்தி.
ஆனால் நாங்கள் அவளை விட கொஞ்சம் புத்திசாலி, நாளை காலை நாங்கள் இங்கிருந்து கிளம்பும் கார்னாக் கப்பலில் வாடி செல்ல இருக்கிறோம், அவளுக்கு அது தெரியவரும் பொழுது அதிக நேரம் ஆகி இருக்கும், அவள் நாங்கள் கெய்ரோ சென்றுவிட்டதாக தான் நினைப்பாள், அதே நேரத்தில் நாங்கள் எங்களுடைய தேனிலவை நிம்மதியாக கழித்துக்கொண்டு இருப்போம்.
நானும் நாளை கார்னாகில் இருப்பேன்.
எங்களால் உங்களுக்கு ஏன் இவ்வளவு சிரமம்.
உங்களால் எனக்கு எந்த சிரமமும் இல்லை மிஸ்டர். டோயல், என்னுடைய பயண திட்டமும் அதுதான்.
அப்புறம் உங்களுடன் பயணம் செய்யும் அந்த வயதான நபர் யார்?
மிஸ்டர். பென்னிங்டனை கேட்கிறீர்களா? அவர் லின்நெட்டின் அமெரிக்கா தொழில் பங்களிப்பாளர், தற்செயலாக அவரை நாங்கள் கெய்ரோவில் சந்தித்தோம்.
எங்களுடைய திருமண அழைப்பிதழ் அவரை சென்றடைவதற்கு முன்பே அவர் கார்மனியக் கப்பலில் நியூயார்க்கில் இருந்து கெய்ரோவிற்கு தன் பயணத்தை தொடங்கி விட்டார், எங்களுக்கு திருமணம் நடந்ததே அவருக்கு தாமதமாகத்தான் தெரியவந்தது.
இது தற்செயலாகத் தான் நடந்ததா?....
...கார்மனியக் கப்பல் தான் இடிக்கிறது!!



பயணிகள் அனைவரும் கப்பல் கார்னாக்கில் ஷெல்லால் நோக்கிய தங்களுடைய ஏழு நாள் பயணத்தை தொடங்கினார்கள்
கார்னிலியா!! வர வர உன்னுடைய ஞாபக மறதிக்கு அளவே இல்லாமல் போய்விட்டது, இந்த முறையாவது மறக்காமல் எல்லாத்தையும் எடுத்து வைத்தியா? முக்கியமாக என்னுடைய மருந்துகள்!!
கஸின் மேரி, நான் இம்முறை எதையும் மறக்கவில்லை!
கார்னிலியா!! இன்னும் அங்கே நின்று என்ன செய்து கொண்டு இருக்கிறாய், சீக்கிரம் வா!
இதோ வருகிறேன், கஸின் மேரி!!
ஹலோ!
கலோனல் ரேஸ்! என்ன ஒரு ஆச்சர்யம்!!
எனக்கு பணியில் இருந்து ஒரு சின்ன விடுமுறை தேவைப்பட்டது, இங்கே வர அதுதான் காரணம்.
இங்கே என்ன வேலை விஷயமாக வந்திருக்கிறீர்களா மிஸ்டர்.பாய்ராட்?
இல்லை, இம்முறை அப்படி இல்லை.
உஷ்ஷ்!! கொஞ்சம் பொறுமையாக இருங்கள், நான் உமக்கு அனைத்தையும் பொறுமையாக கூறுகிறேன்.
அடக்- -கடவுளே!!
உங்கள் இருவரையும் நான் இங்கே சந்திப்பேன் என்று நிச்சயம் நினைக்கவே இல்லை சைமன்!!
லின்நெட்! ஒருவழியாக நாம் அவளுடைய பார்வையில் இருந்து தப்பித்து விட்டோம், அவளுக்கு நாம் இங்கே இருப்பது நிச்சயம் தெரிய வாய்ப்பில்லை! அவ......


அவளுக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னீர்கள், இப்பொழுது அவளுக்கு எப்படி தெரிந்தது? சாகும் வரை அவள் நம்மை விடப்போவதில்லை!
இதனை இப்படியே விட்டால் சரிவராது, அவளை நேருக்கு நேர் எதிர்கொள்வது தான் சரி.
மிஸ்டர். பாய்ராட் நீங்கள் இப்படி சொல்வதே எனக்கு விசித்திரமாக உள்ளது, நீங்கள் சும்மா இருந்தாலும் கேஸ் உங்களை தேடி வருமே!!
அப்புறம் நான் இப்பொழுது பாருக்கு போகிறேன், நீங்களும் என்னுடன் வருகிறீர்களா?
டின்னரே என்னை களைப்படைய வைத்துவிட்டது, நாளை நிச்சயம் வருகிறேன், மேடம் அல்லர்டன் ஒரு அற்புதமான பெண்மணி, ஆனால் பேச ஆரம்பித்தால் தான் பிரச்சினை, பக்கத்தில் இருப்பவர்களுக்கு மயக்கம் வந்து விடும்.
டின்னர் முழுவதும் நீ மிஸ்டர். பாய்ராட்டிடம் எதுவும் பேசவில்லையே டிம், ஏன்?
எனக்கு அந்த ஆளை கண்டாலே பிடிக்கவில்லை!!
ஏன் அப்படி?
அது என் தனிப்பட்ட விஷயம், நாம் வேறு ஏதாவது பேசுவோமா!!
மிஸஸ். லின்னெட் இந்த இடங்களில் உங்கள் கையெழுத்தை இடுங்கள். வெறும் தொழில் சார்ந்த ஒப்பந்தம் தான், படிக்க வேண்டிய அவசியம் இருக்காது
ஐந்தாவது வீதியில் உள்ள கட்டிடம்.... மேற்கில் உள்ள நிலங்கள்.... நான் எதில் கையெழுத்து இடுவதாக இருந்தாலும் படிக்காமல் செய்வதில்லை!
இந்த பொடி பொடியான எழுத்துகளை படித்து பார்த்து நீ கையெழுத்து போடுவதற்குள் விடிந்துவிடும்!!
நீ என்னை விட அகிகமாகவே சந்தேகப்படுகிராய், என்னையெல்லாம் கையெழுத்து போட சொன்னால் யோசிக்காமல் செய்துவிடுவேன்
இது நிச்சம் நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டிய ஒரு குணம், சைமன் டியர்!



உங்களுடைய இந்த குணம் என்னை வெகுவாக கவர்ந்து விட்டது மேடம், எப்பொழுதுமே படித்து விட்டு கையெழுத்து இடுவது ஒரு நல்ல குணம்.
நன்றி, மிஸ்டர்.....?
ரேஸ்.... கலோனல் ரேஸ்.
மற்றதை நாம் பிறகு சாவகாசமாக பேசலாம், இல்லையென்றால் உங்கள் கணவர் சொன்ன மாதிரி இங்கேயே மணிக்கணக்காக நீங்கள் இருக்க நேர்ந்திடும்.
உங்களுக்கு அடுத்தவர்களை வேவு பார்க்கும் ஆர்வம் அல்லது வேகம் ரொம்பவே அதிகம், மிஸ்டர். ரேஸ்!!
உண்மைதான் மிஸஸ். லின்நெட், நான் உங்களுடைய வழக்கறிஞர்களால் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளேன், எங்களுக்கு மிஸ்டர். பென்னிங்டன் மீது நிறைய சந்தேகங்கள் உள்ளது, நிறைய ஏமாற்று வேளைகளில் ஈடுபட்டுள்ளார்!!
குட் ஈவ்னிங்!
கார்னிலியா!! என்னை மிஸஸ். லின்நெட்டுக்கு எப்பொழுது அறிமுகம் செய்து வைக்க போகிறாய்!
உனக்கு எல்லாமே நான் சொல்லித்தான் புரிகிறது!
இது எல்லாத்துக்கும் காரணம் அவளுடைய தந்தை தான், இவளுக்கு செல்லம் கொடுத்து கெடுத்துவிட்டார், ஆனால் இப்பொழுது அவளுக்கு என்னை விட்டால் வேறு யாரும் இல்லை!!
மிஸ். வான் ஸ்குயிலர், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
அவளுக்கு பொறாமை என்று சொல்கிறேன், மிஸஸ்.லின் நெட் எனக்கு உங்களுடைய நெக்லஸ் ரொம்ப பிடித்திருக்கிறது, நானும் உங்களை போலத்தான், போலியை கண்டால் எனக்கு அறவே பிடிக்காது.
சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள் மிஸ்டர். பாய்ராட், அதிகமாக சொத்துகளை வைத்திருப்பதும் ஒரு விதமான கவலை தான், எல்லோரும் உங்களை வெறுக்கும் பொழுது, எவ்வளவு சொத்து இருந்து என்ன பிரயோஜனம்
எனக்கு தெரியவில்லை மேடம், நான் இதுவரை அப்படி ஒரு நிலைமையை அனுபவித்தது இல்லை!!



அபு சிம்பல் கோவில்
இந்தப் பக்கம் இருப்பது அமான், அந்தப் பக்கம் இருப்பது ராமேசிஸ்.
நிஜமாகவே இது ஆச்சர்யபடக் கூடிய விஷயம் தான் மிஸ்டர். பென்னிங்டன்!
கார்னிலியா!!
எனக்கு என்னுடைய குடை வேண்டும், கொஞ்சம் எடுத்துக் கொடு!
மேடம். லின்நெட்டை நீங்கள் இங்கே பார்த்தது உங்களை நிச்சயம் திக்குமுக்காட வைத்திருக்கும்.... அதுவும் திருமணம் ஆகிய நிலையில்....
நிச்சயமாக மிஸ்டர். பாய்ராட், அவருடைய திருமண அழைப்பிதழ் நியூயார்க்கில் என்னை வந்தடைவதற்க்கு முன்பாகவே கெய்ரோவை நோக்கிய எனது பயணம் தொடங்கிவிட்டது, அவரை நான் இங்கே பார்ப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை!
ஆனால் மேடம் டோயல் என்னிடம் நீங்கள் கார்மனியாக் கப்பலில் வந்ததாக கூறினார்!
ஆமாம்!
இங்கே பாருங்கள் மிஸ்டர். பாய்ராட், இந்த இடத்தை பார்க்கும் பொழுது உங்களுக்கு பிரமிப்பாக இல்லை!
இந்த பாரோ சிற்பங்களை பார்க்கும் பொழுது எனக்கும் அடிவயித்தில் இருந்து பயம் குமட்டிக்கொண்டு வருகிறது, இவை எல்லாம் மர்மங்கள் நிறைந்தவையாகவே இன்று வரை இருக்கின்றன.
நீங்கள் சொல்வதை நானும் ஒப்புக் கொள்வேன் சைமன், இவைகளின் வரலாற்று பின்னணி நிச்சயம் மர்மங்கள் நிறைந்தவையே


நாம் சீக்கிரம் வெளியே செல்வது தான் நல்லது!
இந்த இடம் எவ்வளவு அமைதியாக இருக்கிறது பார்த்தாயா! நான் ரொம்ப நாட்களுக்கு பிறகு நிம்மதியை உணர்கிறேன்!!
حذار!
என்ன சத்தம் அது?
வின்நெட் !!!
!
பாறை சரிவு ஏற்பட்டு இருக்கிறது! நாம் அனைவரும் கொஞ்சம் கவனமாகவே இருக்க வேண்டும் இனிமேல்!
இது ஒன்றும் விபத்து கிடையாது மிஸ்டர். பாய்ராட், எல்லாம் அவளுடைய வேலையாகத்தான் இருக்கும்!
கொஞ்சம் தாமதித்து இருந்தாலும், உடல் சக்கரத்தில் மாட்டிய எலியை போல நசுங்கி இருக்கும்!
அதிகம் படம் பார்ப்பியோ, உன்னுடைய கற்பனை திறன் அபாரம்!
இங்கே என்ன நடந்தது? நான் வருவதற்கு கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது.
அவள் கப்பலில் இருக்கிறாள், அதனால் இது நிச்சயம் விபத்தாக தான் இருக்கும் சைமன்!



பகலிலேயே அந்த சிலைகள் நம்மை பயமுறுத்தின, இரவில் சொல்லவா வேண்டும், பார்க்கவே படுபயங்கரமாக இருக்கிறது!
நீங்கள் செய்யும் செயல், சொல்லும் வார்த்தை, அனைத்திலும் ஒரு நாடகத்திற்கு தேவையான அனைத்து அம்சங்களும் இருக்கிறது.
நான் தேர்ந்தெடுத்த பாதை அப்படி, திரும்பி செல்ல வழி கிடையாது
எந்த ஒரு விஷயத்திலும் அப்படி ஒன்று இருப்பதாக எனக்கு தெரியவில்லை, எல்லாம் நம் கையில் தான் இருக்கிறது, உங்களை எது இந்த சூழ்நிலைக்கு தள்ளியது அதை அறுத்து எறியுங்கள், உங்களுக்கான வழி எளிதாக கிடைத்துவிடும்.
நான் அதை எல்லாம் கடந்து ரொம்ப காலம் ஆகிவிட்டது மிஸ்டர். பாய்ராட், எல்லாம் விதி படி தான் நடக்கும்! குட் நைட்!!
குட் நைட்! மேடம்...
என்ன ஒரு அமைதியான மாலை பொழுது மிஸ்.... கார்னிலியா! நான் உங்களை அப்படி கூப்பிடலாம் தானே?
நிச்சயமாக.... அமைதியான மாலை நேரம் தான் டாக்டர். பிரஸ்னர்!
நீங்கள் ஒரு நர்ஸ் என்று எனக்கு தெரியாது மிஸ். கார்னிலியா, எனக்கு சூரிச்சில் ஒரு கிளினிக் இருக்கிறது, உங்களுக்கு பின்னாளில் வேலை தேட வேண்டிய நிலை ஏற்பட்டால், நிச்சயம் என்னை வந்து பாருங்கள்.
கார்னிலியா !!!
நிஜமாகவா சொல்கிறீர்கள் டாக்டர். பிரஸ்னர்! என் நம்பிக்கை இப்போது பன்மடங்கு அதிகரித்து- -விட்டது!!
கார்னிலியா!! என்னுடைய சிகப்பு சால்வை எங்கே? நீ எதையுமே சரியான இடத்தில் வைக்க மாட்டியா? உன்னை வைத்துக்கொண்டு நான் என்ன தான் செய்ய போகிறேனோ!!
ஆனால் கசின் மேரி, அது உங்களுடைய அறையில் தானே இருந்தது!!



இப்படி ஒரு பெண்ணிடம் அடிமை பட்டு கிடப்பதை விட, அவள் அந்த டாக்டரின் கிளினிக்கில் வேலை செய்வதே மேல்.
ரோசலி!!!
!
ரோசலி!! எங்கே போய் தொலைந்தாள் இந்த பெண், என்னுடைய சொந்த இரத்தமே என்னை புறக்கணிக்கும் என்று நான் என்றும் நினைத்ததில்லை, என் நெஞ்செல்லாம் கனக்கிறது!! எல்லாம் என் விதி!!!
?
"பெரியவர்கள் வெளியே சென்றால் இளசுகளுக்கு கொண்டாட்டம்" பாய்ராட்டின் பழமொழி, நிச்சயம் இவருடைய மகன் தான் இவரை வெளியே துரத்தி இருக்க வேண்டும்!!
சைமன்! இப்பொழுது உன்னுடைய முறை
சாரி பென்னிங்டன்!! என்னுடைய கவனம் கொஞ்சம் சிதறிவிட்டது.
புண்பட்ட மனம் உடையோர் சங்கத்திற்கு உங்களை வரவேற்கிறேன் மிஸ். ராப்சன், "இன்று அவன் அவளுடைய காதலன், அவள் அவனை திருடிக்கொண்டாள்" என்பது தான் தலைப்பு!
?
இது எல்லை மீறி போகின்றது !!
அவளின் நேசம், அவனின் துரோகம், விடாமல் துரத்தும்...
லின்னெட் இப்பொழுது உன்னுடைய முறை...
அஹ்... உம்....



என்ன செய்வது, லின்நெட்டிடம் பணம் எவ்வளவு இருந்தாலும், குணம் இவ்வளவு மட்டமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை!
நான் தூங்க போகிறேன்! நீங்கள் வருகிறீர்களா சைமன்?
இல்லை, நீ போ! உடனே வந்துவிட்டால், அவளுக்கு பொசுக்கென்று போய்விடும்.
எனக்கும் தூக்கம் வருகிறது! குட் நைட் டாயல்!
இருங்கள் நானும் உங்களுடன் வருகிறேன், குட் நைட் சைமன்!
மிஸ். ராப்சன், என்னுடன் மதுபானம் அருந்த வருகிறீர்களா? காதலின் பெயரால், நீங்கள் காதல் வயப்பட்டு இருக்கிறீர்களா?!
ஜாக்கி!! எதற்கும் ஒரு எல்லை உண்டு, நீ வீண் கற்பனை செய்கிறாய்!!
இல்லை! எனக்கும் தூக்கம் வருகிறது...
கொஞ்சம் நேரம் இருங்கள்!! நான் சொல்லப்போகும் இந்த சோகமான காதல் கதை நிச்சயம் உங்களுக்கு பிடிக்கும், உங்கள் கண்களில் நிச்சயம் கண்ணீரை வரவழைக்கும்!
நீங்கள் அதிகமாக குடித்திருக்கிறீர்கள், மிஸ். ஜாக்கி!!
நான் குடிபோதையில் இருக்கிறேனா? என்னுடைய போதை இப்பொழுது பழி வாங்குவது மட்டுமே!!
இதுதான் உனக்கு கடைசி வாய்ப்பு, அவளை விட்டு போய்விடு!! இல்லை என்றால் உன்னை இங்கேயே கொன்று விடுவேன்!!
?!
சும்மா பைத்தியக்காரி போல எதையாவது உளறாதே ஜாக்கி!
உனக்கு என்ன தைரியம்? செய்வதை எல்லாம் செய்து விட்டு நான் பைத்தியக்காரியா!!



ஆஆஆவற்!
என்னு--டைய கால்!!
இல்... இல்லை... நான் வேண்டு--மென்றே இப்படி செய்ய வில்லை..
என்னை மன்னித்து--விடுங்கள் சைமன்!! மன்னித்து--விடுங்கள்!!
ஐயோ!! மிஸ்டர். அல்லர்டன்!!
மிஸ்டர். அல்லர்டன்! இங்கே சீக்கிரம் வாருங்கள்!!
என்ன விஷயம்?!
உள்ளே ஒரு பிரளயமே நடந்து முடிந்து விட்டது, மிஸ். ஜாக்கி தன்னுடைய துப்பாக்கியால் மிஸ்டர் சைமனை சுட்டுவிட்டார்!
என்ன?!
நிஜமாகவா! நான் கூட எதோ ஷாம்பைன் பாட்டிலை தான் யாரோ திறந்தார்கள் என்று நினைத்தேன்!!



ஐயோ!! நான் என்ன செய்து விட்டேன், இப்படி செய்ததற்கு நான் உயிருடன் இருப்பதே பாவம், நான் செத்துவிடுகிறேன்!!
மிஸ். ராப்சன், இவளை தயவு செய்து இவளுடைய அறைக்கு அழைத்து செல்லுங்கள், அமைதியாகும் வரை அவள் அருகிலேயே இருங்கள்!!
என்னை விடு, நான் உயிர் வாழவே தகுதி இல்லாதவள்!!
மேடம், தயவு செய்து என்னுடன் வாருங்கள்...
முதலில் இவளை இங்கிருந்து அழைத்து செல்லுங்கள், பிறகு யாராவது ஒரு டாக்டரை வரச் சொல்லுங்கள்!
நான் இங்கே இருந்து அப்படியே தண்ணீரில் குதித்து என் உயிரை விட்டு விடு--கிறேன்!!
இவள் செய்யக்கூடியவள் தான், இவளை தனியாக விடாதீர்கள்!!
நீங்கள் எதற்கும் கவலை படாதீர்கள் மிஸ்டர். டாயல், நான் ஒரு செவிலியர், என்ன செய்யவேண்டும் என்று எனக்கு நன்றாகவே தெரியும், இன்று இரவு முழுவதும் நான் இவர் கூடவே இருக்கிறேன்!!
COMICS PDF TIMES
என்னை விடு நான் தண்ணீரில் குதித்து விடுகிறேன், எனக்கு இனிமேல் வாழ விருப்பம் இல்லை, ஐயோ சைமன்.... சைமன்..
நீ இப்பொழுது அமைதியாக இருக்க போகிறாயா இல்லையா!!
அவளை அப்படியே கொஞ்சம் இறுக்கமாக பிடித்து கொள்ளுங்கள், இந்த மயக்க ஊசியை அவருக்கு போட்டு விடுகிறேன்!
சீக்கிரம்!! அங்கே அந்த மனிதர் இரத்தத்தை இழந்து கொண்டு இருக்கிறார், நான் போய் டாக்டர் எங்கே என்று பார்க்கிறேன்!!
கொர் கொர் கொர்ர்ர்ர்ர்



உங்களை கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன், இங்கே நடந்த இந்த அசம்பாவிதம் பற்றி என் மனைவியிடம் விடியும் வரை எதையும் சொல்ல வேண்டாம், நான் இதை ஒரு பெரிய பிரச்சனையாக்க விரும்பவில்லை!
எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டாம், யாருக்கும் எதுவும் தெரியாது...
மிஸ்டர். அல்லர்டன், சேதம் கொஞ்சம் அதிகம் தான், காலில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டு இருக்கிறது, எனக்கு கொஞ்சம் உதவி செய்யுங்கள் இவரை தூக்க, என் அறையில் வைத்து நான் இவரை பார்த்துக் கொள்கிறேன்!
யாரும் ஜாக்கியை குறை சொல்ல வேண்டாம்! தவறு என்னுடையது தான்,இது நான் அவளுக்கு செய்த துரோகத்திற்கு கிடைத்த பரிசு!
கொர்ர்
என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும், முதலில் உங்கள் கால்களை மேலும் சேதம் ஆகாமல் பத்திரபடுத்த வேண்டும், அலெக்ஸான்ட்ரியா சென்று அறுவை சிகிச்சை செய்யும் வரை!
ஆஆஆ!
இருங்கள் நான் போய் அது எங்கே என்று பார்க்கி--றேன்!!
மிஸ்டர். அல்லர்டன், அந்த துப்பாக்கி, அதை அப்படியே விடுவது நல்லதுக்கு இல்லை!
சரி நீங்கள் போய் அதை தேடுங்கள்..... மிஸ்டர். டாயல் நீங்கள் நிம்மதியாக தூங்க இந்த ஊசியை உங்களுக்கு இப்பொழுது செலுத்த போகிறேன்...
டாக்டர். ப்ரெஸ்னர்!! துப்பாக்கியை காணவில்லை!!
என்ன?!


ஆஆஆஆ!!
பயம், பீதி எல்லாம் ஒருசேர தாக்க, டாயலின் பணி பெண்களுள் ஒருவரான லௌசி பார்காட் கத்திக்கொண்டே கப்பலின் மேல் தளத்திற்கு ஓடினாள்!!
உதவி!! உதவி!!
மிஸஸ். லின்நெட்!! மிஸஸ். லின்நெட்!! எழுந்திருங்கள்!!!
கலோனல் ரேஸ்! நான் சரியாகத் தான் யூகித்து இருக்கிறேன், நான் நினைத்தது போலவே நடந்துவிட்டது!!
நான் இதில் நேரடியாக எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறேன், இதில் உங்கள் உதவி தேவை, மிஸ்டர். பாய்ராட்.
நிச்சயமாக நண்பரே!
ஜாக்கி நேற்று இரவு செய்த கூத்துக்கள் அனைத்தை--யும் டாக்டர. ப்ரெஸ்னர் மூலம் தான் நான் தெரிந்து கொண்டேன்.
ஒரே இரவில் இரண்டு அசம்பாவிதம் நடந்தேறி இருக்கிறது, இவ்வளவு களேபரத்திலும் நான் தூங்கிக் கொண்டு இருந்து இருக்கிறேன்!!!
பாய்ண்ட் பிளாங்க் ரேஞ்ச், அதாவது மிகவும் அருகில் வைத்து சுடப்பட்டு இருக்கிறாள், காயம் மற்றும் துப்பாக்கியில் இருந்து வந்த மருந்தை வைத்து பார்க்கும் பொழுது, சிறிய வகை துப்பாக்கியாக, 0.22 காலிபர் வகையை சார்ந்தாக இருக்கலாம்...
இங்கே என்னவோ எழுதி இருக்கிறார்கள்?!



'J' அவர் ஜாக்குலினாக இருக்கலாம், சாவதற்கு முன் நமக்கு கொலையாளியின் பெயரை சொல்ல முற்பட்டு இருக்கிறார்!!
அதற்கு வாய்ப்பே இல்லை, மிஸஸ். லின்னெட் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்!!
அப்படியென்றால் ஜாக்கிக்கும் லின்னெட்டுக்கும் இருக்கும் பகையை பயன்படுத்தி கொலையாளி நம்மை குழப்பி இருக்கிறான்!!
சபாஷ்!! என்ன ஒரு ஆச்சர்யம்!!!
நாம் முதலில் நம்மிடம் இருக்கும் தகவல்களை ஒன்றாக்குவோம், யார் யாருக்கு எல்லாம் இவர்கள் பகை பற்றி தெரியும்?
சொல்லப்போனால் இங்கிருக்கும் அனைவருக்கும் தெரியும், மிஸஸ். ஜாக்கிக்கு தன்னுடைய உணர்வுகளை கட்டுப்படுத்த தெரியாது..... சுமாராக எத்தனை மணிக்கு கொலை நடந்து இருக்கலாம் டாக்டர்?
நள்ளிரவு பன்னிரெண்டு மணி முதல் அதிகாலை இரண்டு மணிக்குள் நடந்திருக்க வாய்ப்புகள் இருக்கிறது மிஸ்டர். பாய்ராட்.
நல்லவேளை, கொலையாளி பாத்ரூமில் ஒளியவில்லை
நான் கப்பலில் இருக்கும் ஏதாவது ஒரு ஐஸ் ரூமில் சடலத்தை வைக்க சொல்கிறேன்!!
நம்முடைய சந்தேக வட்டத்தில் இருந்து இப்பொழுது மூன்று பேர் நீங்கி விட்டனர், ஒன்று மிஸ்டர். டாயல், அவருக்கு அடிபட்டு இருக்கிறது, மேலும் மிஸஸ். ஜாக்கி மற்றும் மிஸ். ராப்சன், இவர்கள் மூவரும் ஒன்றாக தான் இருந்திருக்கிறார்கள்.
எனக்கும் அப்படிதான் தோன்றுகிறது..
எனக்கு நேற்று இரவு தண்ணீரில் எதையோ தோழி போடுவதை போல ஒரு சத்தம் கேட்டது, ஒருவேளை கொலையாளி துப்பாக்கியை தோழி தண்ணீரில் எறிந்து இருக்கலாமோ?!
இருக்கலாம் கலோனல், ஆனால் கொலை சரியாக எப்பொழுது நடந்தது என்று தெரியாமல் நம்மால் எதையும் யூகிக்க முடியாது.
நான் அவளை கொல்லவில்லை, நேற்று இரவு கொஞ்சம் அமைதி இழந்த காரணத்தால் டாயலை கொலை செய்ய துணிந்தேன், ஆனால்அவளை நான் கொல்லவில்லை, நான் ஒன்றும் அவ்வளவு மோசமானவள் கிடையாது!!
நான் உங்களை நம்புகிறேன், ஒரு கொலை செய்யும் அளவுக்கான தைரியம் உங்களிடம் கிடையாது.


நீங்கள் கவலைப்பட தேவை இல்லை, மிஸ். ராப்சன் உங்களுடன் தான் இருந்தார் என்று எங்களுக்கு தெரியும்.
நேற்று குடி போதையில் எனக்கு பைத்தியம் பிடித்து விட்டது, அதை இங்கு யாரோ ஒருவர், அவருக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு விட்டார்...
இதில் ஆச்சர்யம் என்னவென்றால், நான் உங்களிடம் சொன்னதை போலவே லின்நெட் இறந்திருக்கிறாள், உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?
நீங்கள் அன்று ஹோட்டலில் என்னிடம் உங்களுடைய துப்பாக்கியை காட்டியது, அவளை கொன்றுவிடுவேன் என சொன்னது, அனைத்தும் ஞாபகம் இருக்கிறது!
அன்றே உங்களிடம் என்னை யாரோ ஒரு ஆள் வேவு பார்க்கிறார்கள் என்றும் சொன்னேன்!
உங்களை பின்தொடர்ந்தது நிஜமாகவே ஒரு ஆண் தானா மேடம்?
போற போக்கை பார்த்தால், இந்த விடுமுறை முடிவதற்குள் என் தலை நரைத்து விடும் போல இருக்கிறதே!
மிஸ்டர். பாய்ராட், சைமன் இப்பொழுது எப்படி இருக்கிறார்? அவர் உயிருக்கு எந்த பாதிப்பும் இல்லையே?
உயிருக்கு எந்த பாதிப்பும் இல்லை!
நான் உங்களை கெஞ்சி கேட்கிறேன், என்னால் அவரை பார்க்க முடியுமா?
இந்த கோரிக்கைக்கு முடிவெடுக்க வேண்டியது டாக்டர். ப்ரெஸ்னர், பிறகு மிஸ்டர் டாயல் அதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும்!
நான் செய்த இந்த கொடூர செயலுக்கு அவர் என்னை மன்னிப்பாரா?
?


என்னை மன்னித்துவிடுங்கள், என்னால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை!
இந்த சமயத்தில் உங்களை கேள்வி கேட்பதற்கு என்னை மன்னிக்க வேண்டும் மிஸ்டர். டாயல், நான் கேள்விப்பட்ட வரை உங்கள் மனைவிக்கு தொழில் ரீதியாக நிறைய எதிரிகள் இருக்கிறார்கள், சரியா?
என் மனைவியின் தந்தை தொழில் போட்டியில் நிறைய குடும்பங்களை நிர்மூலம் ஆக்கியுள்ளார், அதனால் ஆரம்பத்தில் இருந்தே தன தந்தையால் பாதிக்கப்பட்ட நபர்கள் யாராவது இருக்க கூடும் என்ற அச்சத்திலேயே தான் இருந்தாள்!
அதற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்?
அவள் எப்பொழுதுமே தன்னை சுற்றி எதிரிகள் இருக்கிறார்கள் என்ற அச்சத்திலேயே வாழ்பவள், கொஞ்சம் அதிக பிரசங்கி தனமாக இருந்தாலும், ஜாக்கியின் நேரடியான தாக்குதல் அவளுடைய பயத்தை அதிகமாக்கி விட்டது!
ஹ்ம்ம்... இன்னொரு கேள்வி, உங்கள் மனைவியிடம் ஏதேனும் விலை உயர்த்த ஆபரணங்கள் இருந்ததா?
அவள் கழுத்தில் இருந்த நெக்லஸ் மட்டுமே ஐம்பதாயிரம் டாலர் மதிப்பு பெறும், இது எல்லாம் கேவலம் ஒரு நெக்லஸுக்காக நடந்திருக்கும் என்று சொல்கிறீர்களா?
வாய்ப்புகள் இருக்கலாம், இந்த மாதிரியான சுற்றுலா கப்பல்களில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபடுவதற்கேன்றே சில கூடங்கள் இருக்கின்றன, பிறகு உங்கள் மனைவியின் பணிப்பெண் எத்தனை ஆண்டுகளாய் அவருடன் வேலை செய்கிறார்?
சுமார் ஒரு இரண்டு மாதங்களாக, நீங்கள் அவளையா சந்தேக.....?
நான் அவளை இங்கே அழைக்கட்டுமா?
நெக்லஸ்? ஒவ்வொரு இரவும் தூங்குவதற்கு முன் அதை கழட்டி வைப்பது வழக்கம், நேற்றும் அதை கழட்டி தன் தலையணைக்கு அருகில் இருந்த மேஜையில் வைத்தார்.
இன்று காலை அந்த நெக்லஸ் எங்கே போனது?
நான் ஒன்றும் அதை எடுக்கவில்லை, காலை அறையில் மேடம் இருந்த கோலத்தை பார்த்துவிட்டு கத்திகொண்டே ஓடினேன், ஒரு கட்டத்தில் மயக்கமடைந்து விட்டேன்!
நீங்கள் நிஜமாகவே எதையும் கவனிக்கவில்லையா? இப்பொழுது என் கண்ணை என்னாலேயே நம்ப முடியவில்லை, ஆனால் இன்று காலை நெக்லஸ் அந்த மேஜையில் இல்லை.
அதை நான் எடுக்க-வில்லை!



எனக்கு திருட வேண்டிய அவசியம் இல்லை, நான் குற்றமற்றவள் என்று நிரூபிக்க என்னால் முடியும்.
நிச்சயமாக, மிஸ். பௌர்கெட்.
கொஞ்சம் வெளியே சென்றால் நான் என்னுடைய பேஷண்டை கவனிப்பேன்.
இதோ கிளம்பிவிட்டோம் டாக்டர்.
உங்களுக்கு வேறு ஏதாவது தெரிந்தால் தைரியமாக சொல்லுங்கள், அது எங்களுடைய விசாரணைக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.
கொலை நடந்த இடத்தில் நான் இல்லை மிஸ்டர். பாய்ராட், பிறகு எனக்கு எப்படி தெரியும்?
ஒருவேளை நான் நேற்று தூங்காமல் இருந்திருந்தால், மேல் தளத்திற்கு சென்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும், அப்படி சென்றிருந்தால் அந்த கொலையாளி யார் என்று எனக்கு தெரிந்திருக்கும்.
ஆனால் இப்பொழுது உங்களிடம் சொல்வதற்கு என்னிடம் எதுவும் இல்லை...
விளையாடாதே லூசி, உன் மீது யாரும் இங்கே குற்றம் சுமத்தவில்லை, உனக்கு தெரிந்ததை சொல், உன் பாதுகாப்பை நான் உறுதி படுத்துகிறேன்.
கப்பலின் மேல் தளத்தில்.
மிஸ். பௌர்கெட் நம்மிடம் எதையோ மறைக்கிறார் என்று என் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டே இருக்கிறது!
மிஸ்டர். பாய்ராட் உண்மையில் அவள் கொள்ளை கும்பலை சேர்ந்தவளாக இருந்தால்?
திருடுவது தான் குறிக்கோள் என்றால், லின்னெட்டின் சொத்தின் மேல் ஆசைபடுபவர்கள் இங்கே அதிகம் இருக்கிறார்கள்.
வேண்டாம், நன்றி!
நீங்கள் பென்னிங்டனை பற்றி பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன்...
நிச்சயமாக, நீங்கள் நேற்று கையெழுத்து படலத்தின் பொது குறுக்கீடு செய்தது ஒன்றும் விபத்து இல்லையே!



நீங்க சொல்வதும் சரிதான், பென்னிங்டன் இதை செய்திருக்க வாய்புகள் உண்டு..... நேற்று அவன் கையெழுத்து வாங்க முற்பட்டதுக்கு காரணமே அவன் கொள்ளையடித்த பணம் வெளியே தெரியாமல் இருக்கத்தான்.
லின்நெட் ஒன்றும் தான் எதற்காக கையெழுத்து போடுகிறோம் என்று தெரியாத குழந்தை கிடையாது, ஆனால் அவருடைய கணவர் தான்....
நேற்று அவர் சொன்னதை நானும் தான் கேட்டுக்கொண்டு இருந்தேன், "என்னையெல்லாம் கையெழுத்து போட சொன்னால் யோசிக்காமல் செய்துவிடுவேன்"
இப்பொழுது அவர் இருக்கும் நிலைமையில் அவரை யார் வேண்டுமானாலும் ஏமாற்றலாம், இதையே வாய்ப்பாக பயன்படுத்தி கொள்வார்கள்!!
ஹலோ மிஸ்டர். பாய்ராட்
சைமன் என்னை பார்க்க சம்மதித்து விட்டதாக இப்பொழுது தான் டாக்டர் சொன்னார், சைமன் என்னை மன்னித்து- -விட்டார்.
கேட்கவே சந்தோசமாக இருக்கிறது மேடம்!!
ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள்... ஒருவனுடைய சாவு....
அடுத்தவனுக்கு கொண்டாட்டம் கிடையாது கலோனல், பாய்ராட்டை நம்புங்கள், இதை நான் என்னுடைய அனுபவத்தில் சொல்கிறேன்!
வழி விடுங்க! வழி விடுங்க! சார் சீக்கிரம் வாங்க!!
கலோனல், நாங்கள் அதை கண்டுபிடித்து விட்டோம்!!
இதோ துப்பாக்கி! வலை வீசி எடுத்துவிட்டோம்!!


இந்த துப்பாக்கியை தான் இரண்டு நாட்களுக்கு முன் ஹோட்டலில் மிஸ். ஜாக்குலின் என்னிடம் காண்பித்தார், இரண்டு தோட்டாக்கள் சுடப்பட்டு இருக்கிறது...
பிங்க் நிற கரை படிந்த ஒரு கைக்குட்டை...
இந்த கந்தல் துணியில் உள்ள ஓட்டைகளை பாருங்கள் கலோனல், நிச்சயம் இது சத்தத்தை குறைக்க பயன்படுத்தி இருக்க வேண்டும்!!
என்னுடைய பட்டு சால்வை உங்களுக்கு கந்தல் துணியா?
பட்டா?
பின்ன கந்தலா??
மிஸ். வான் ஸ்கூய்லர்! அந்த துணியை தயவு செய்து திருப்பி கொடுத்து விடுங்கள், எங்கள் விசாரணையில் அது ஒரு முக்கியமான தடயம்
கொலை செய்தவன் நிச்சயம் நேற்று ஜாக்கி செய்த அலப்பறைகளை நேரில் பார்த்தவனாக தான் இருக்க வேண்டும், அதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, ஜாக்கியின் துப்பாக்கியை வைத்து லின்நெட்டை கொலை செய்திருக்க வேண்டும்....
...மேற்கொண்டு பழியை ஜாக்கியின் மீது சுமத்த சுவரில் "J" என்று எழுதி வைத்து இருக்கிறான், ஆனால் ஜாக்கியை சிக்கவைக்கும் துப்பாக்கியை அங்கேயே வைக்காமல் தண்ணியில் தூக்கி எறிந்திருக்கிறான்.
இந்த கதை சுத்த முட்டாள் தனமாக இருக்கிறது, இவர்கள் யாரை முட்டாள் ஆக்க நினைப்பது ஹெர்குயூல் பாய்ராட்டை!!


இதை என்னிடம் இருந்து யார் திருடி இருப்பார்கள் என்று எனக்கு நன்றாகவே தெரியும்!
நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், எனக்கும் இது இந்த நிலைமையில் தேவையில்லை!
நீங்கள் யாரை பற்றி சொல்கிறீர்கள் மேடம்?
மிஸ். ஒட்டர்பௌர்ன்!
நேற்று இரவு நடந்த களேபரங்களின் சத்தத்தால் சுமார் பத்து மணியளவில் தூக்கத்தில் இருந்து விழித்தேன், அப்பொழுது மிஸ். ஒட்டர்பௌர்ன் சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டு இருப்பதை கவனித்தேன்.
அவர் எதையோ தண்ணீரில் தூக்கி போடுவதை கவனித்தேன்.
ரோசலி ஒட்டர்பௌர்ன்?
மேல் தளத்தில்...
விஷயத்தை கேள்விப்பட்டேன், இந்த கொடூர செயலை யார் செய்திருப்பார்கள்?
அவரை சுற்றி எதிரிகள் அதிகம் மிஸ்டர். பென்னிங்டன், அந்த குகையிலும் ஒரு பாறையின் மூலம் அவரை கொல்ல சதி நடந்தது, உங்களுக்கு தெரியுமா....
நீங்கள் அப்பொழுது அந்த இடத்தில் இல்லையா?
இல்லை நான் அப்பொழுது அந்த கோவிலை விட்டு வெளியே சென்று விட்டேன், அவளுக்கு இப்படி ஒரு நிலையா!
மன்னிக்கவும், நான் இப்போழுது கலோனல் ரேசை சந்திக்க வேண்டும்!
இந்த கொலையை செய்த பாவியை நீங்கள் சீக்கிரம் கண்டுபிடித்து விடுவீர்கள் என்று நம்புகிறேன்.
பொய் சொல்லி விட்டீர்கள் மிஸ்டர். பென்னிங்டன், கோவிலில் விபத்து நடந்த பொழுது நான் மட்டும் தான் கோவிலை விட்டு வெளியே வந்தேன், அதுவும் தனியாக!!


லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்! மதிய உணவு தயார், வாருங்கள்!!
நான் ரோசலி ஓட்டர்பௌர்னை விசாரித்தேன், அவர் தான் எதையும் தண்ணியில் தூக்கி எறியவில்லை என்று அழுத்தம் திருத்தமாக சொல்கிறார்!!
அது நமக்கு பழகிய பதில் தானே, இந்த நெக்லஸ் திருட்டை நமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, அனைவருடைய அறைகளையும் ஒரு சோதனை மேற்கொள்வது வேண்டும் கலோனல்.
கொஞ்சம் பொறுங்கள், அனைவரும் வந்து விடட்டும், உணவு வேளை முடியும் சமயத்தில் நான் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறேன், அறையை விட்டு யாரும் வெளியே செல்ல வேண்டாம் என்றும் கூறுகிறேன்!!
அதுவும் சரிதான், அதற்குள் நாமும் உணவை முடித்து விடலாம்!
மிஸஸ். டாயலை நினைத்தால் பாவமாக இருக்கிறது, உங்களுக்கு தெரியுமா மிஸ்டர். பாய்ராட், எனக்கு அவர் பரிச்சியமானவர், ஆனால் நேரடியாக இல்லை, என் மகன் டிம்மின் கசின், ஜோவானா சவுத்வுட் லின்நெட்டின் நெருங்கிய தோழி...
ஜோவானா சவுத்வுட்? இருங்கள்......
எனக்கும் அவரை தெரியும், பேப்பரில் படித்து இருக்கிறேன், லேடி போர்டர்லிங்டனின் வைரம் களவாடப்பட்ட வழக்கில் , அவருடைய பெயரும் அடிப்பட்டது...
நான் அப்பொழுதே சொன்னேன், நீதான் கேட்கவில்லை டிம், அவளால் நமக்கு எப்பொழுதும் பிரச்சனை தான், அவளை பார்ப்பதை நீ நிறுத்திக்கொள்!
சும்மா எதையும் பேசாதீர்கள்! அந்த பார்ட்டியில் நானும் தான் கலந்து கொண்டேன், அன்று அவர் அணிந்து இருந்த வைரம் போலி என்று நிரூபிக்கப்பட்டு விட்டது!
உண்மைதான், திருட்டு போவதற்கு சில வாரங்களுக்கு முன் தான் அதை மாற்றி இருக்கிறார்கள்.



COMICSPDFTIMES


இப்பொழுது மேடம் ஒட்டர்பௌர்ன் அறை, நம்முடைய க்ரைம் நாவல் எழுத்தாளர் நமக்காக என்ன வைத்திருக்கிறார்?
ஹா... ஹா.... ஒரு பாட்டில் சரக்கை தவிர வேறு ஏதும் இல்லை!!
நேற்று இரவு அந்த அம்மா சம்மந்தமே இல்லாமல் கத்தியதற்கு அர்த்தம் இப்பொழுது தான் விளங்குகிறது.
நான் கொஞ்சம் பேசலாமா !
?
மிஸ். வான் ஸ்கூய்ளர் சொன்னது உண்மைதான், நேற்று நான் ஒரு பொருளை தண்ணீரில் தூக்கி எறிந்தேன், ஆனால் அது நீங்கள் நினைக்கும் படி துப்பாக்கி இல்லை!!
நாங்களும் கணித்து விட்டோம்.
இந்த விஷயம் என் அம்மாவிற்கு தெரியாமல் பார்த்துக் கொள்ளுங்கள், நான் உங்களை நம்பலாமா?
நிச்சயம் மிஸ்.ரோசலி, இப்பொழுது நீங்கள் வெயிட்டிங் ஹாலிற்கு செல்லுங்கள்!!
கலோனல் ரேஸ்!!
இந்த சின்ன வயதில் எவ்வளவு கஷ்டங்கள்!!
ஒரு பெண்ணின் அறையில் இருந்து நாங்கள் இதை கண்டெடுத்தோம்! அவருடைய கைப்பையில் இருந்து!!
என்ன சொல்கிறீர்கள் !!
கொஞ்ச நேரத்துக்குள் இவரை என்னுடைய சந்தேக வளையத்துக்குள் வைக்கலாமா, வேண்டாமா என்று யோசித்து விட்டேன்!!
கைக்கு அடக்கமான சிறிய துப்பாக்கி... பிடிப்பதற்கும் லாவகமான ஒன்று... ஒரே மாதிரியான துப்பாக்கி.... ஆச்சர்யம்!!


கலோனல்! வாருங்கள் நாம் டிம் அல்லேர்டனின் அறைக்கு செல்வோம், ஆரம்பத்தில் இருந்தே அவனுடைய முழியே,சரி இல்லை!
அவன் ஒரு கலை ரசிகனா? யார் காதில் பூ சுற்றுகிறான்!!
கேள்வி கேட்க ஆளில்லாத திமிர், மேற்கொண்டு பணமும் கையில் விளையாடுகிறது....
பயலிடம் நிச்சயம் ஏதாவது ஒரு ரகசியம் இருக்கும்.
திருட்டுக்கு இவன் தான் காரணம் என்று நீங்கள் நினைக்கி- -றீர்களா?
நீங்கள் உங்கள் தேடுதலை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம், ஜென்டில்மேன்!
இதற்கு மேலும் நான் உங்களிடம் இதை கொடுக்காமல் இருப்பது நன்றாக இருக்காது!!
நீங்களா!!
?
என்னுடைய கசின் மிஸ். வான் ஸ்கூய்ளர் ஒரு கிளிப்டோமேனியாக், அவர் எங்கு சென்றாலும் பொருட்களை எடுத்து வைத்துக் கொள்வார். அவருடைய ஸ்டாக்கிங்ஸில் இன்று காலை இதை கண்டெடுத்தேன்....
உங்களுடைய இந்த உதவிக்கு ரொம்ப நன்றி மிஸ். ராப்சன்
ஒரு விஷயத்தை தெளிவாக சொல்லுங்கள் மிஸ்..... ஏன் இந்த நோய் உங்கள் கசினை கொலை செய்ய தூண்டி இருக்க கூடாது?
அதற்கு வாய்ப்பில்லை, என்னுடைய கசின் கொஞ்சம் அதிகார தோரணையுடன் நடந்து கொள்வாரே தவிர ஒரு சின்ன எறும்பையும் துன்புறுத்த மாட்டார்.
?
என்ன செய்வது கலோனல், நம்முடைய வேலை இன்னும் முடியவில்லை, இந்த நெக்லஸ் ஒரு போலி!!


இன்னொரு முறை சரியா பாருங்க மிஸ்டர். பாய்ராட்.
நான் நிச்சயமா சொல்லுவேன், முதல் நாள் மிஸஸ். டாயலின் கழுத்தில் நான் பார்த்த முத்து மாலைக்கும் இதற்கும் நிறையவே வித்தியாசம் உள்ளது கலோனல்.
அப்படியென்றால், கொலைகாரன் ஏற்கனவே மாற்றி வைத்ததை தான் மிஸ். வான் ஸ்கூய்லர் எடுத்திருக்கிறார் என்கிறீர்களா?
?
இருக்கலாம்... ஏதோ ஒரு குறை இருக்கிறது.... நாம் மீண்டும் லின்னெட்டின் அறைக்கு செல்லவேண்டும்.
மிஸ். வான் ஸ்கூய்லர் இந்த அறைக்குள் வந்து தான் முத்து மாலையை எடுத்து இருக்கிறார், அவர் ஏன் கொலையாளி பயன்படுத்திய துப்பாக்கியையும் எடுத்து சென்று இருக்க கூடாது?
எங்கே மாட்டிக்கொள்வோமோ என்று பயந்து, அதை தண்ணீரில் வீசி இருக்கலாம், சரியா?
நிச்சயம் இந்த கேஸ் நம்மை பெண்டு எடுக்காமல் விடப்போவதில்லை, ஒரு சின்ன தடயத்தை கூடவா விட்டுட்டு போயிருக்க மாட்டான்!!
கொலையாளி பெண்ணாக இருந்தால்?... ஒரு கைக்குட்டை அல்லது ஒரு லிப்ஸ்டிக் இப்படி எதையுமா விடவில்லை!!
அல்லது ஒரு நெயில் பாலிஷ் பாட்டில்.....
?
இதோ கிடைத்துவிட்டது!! என்னுடைய கணிப்பு தப்பாகிவிடுமோ என்று பயந்துகொண்டே இருந்தேன்!!



வாங்க, இப்ப நாம லூசி பௌர்காட்ஸ் அறைக்கு செல்லுவோம்...
மிஸ். ராப்சன்னுக்கு ஜாக்கி ரொம்பவே கடமை பட்டு இருக்கிறாள்.
பாருங்க! கப்பலோட சேர்ந்து ஒரு காதலும் மிதக்குது...
இரவு முழுக்க அவள் அருகிலேயே இருந்ததால், நிச்சயம் ஜாக்கிக்கு தன்னுடைய அலிபி கிடைத்துவிட்டது, ஆனால்...
!
லூசி எங்கே போனாள்? இன்று மதியம் உணவு அறையில் கூட நான் அவளை பார்க்கவில்லை.
லூசியின் அறையில்...
அறையா இல்லை குப்பை கூடமா!
பணிப்பெண்ணாக வேலை செய்பவள், தன்னுடைய அறையையும் கொஞ்சம் சுத்தமாக வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.
இங்கே தேடுவதால் நமக்கு எந்த பிரயோஜனமும் இல்லை, நேரம் தான் விரயம்!!
!?
இருங்க கலோனல்! கொஞ்சம் தள்ளி நிக்க முடியுமா?
அடக்கடவுளே!! அவள் கட்டிலுக்கு அடியில் இருக்கிறாள்!!



என்னுடைய அனுமானத்தின் படி இவள் சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன் தான் இறந்திருக்க வேண்டும்.
அங்கே பாருங்கள்! அவள் விரல் இடுக்கில் ஏதோ இருக்கிறது!!
கிழிந்த ஆயிரம் பிரான்க் தாளின் ஒரு பகுதி, இப்பொழுது தான் புரிகிறது, இவள் கொலைகாரனை மிரட்டி பணம் பறிக்க முயன்று இருக்கிறாள், அதுவே இவளுடைய சாவிற்கு காரணம் ஆகிவிட்டது.
அவள் இன்று காலை கொஞ்சம் வித்தியாசமாக பேசியபோதே நாம் கொஞ்சம் சுதாரித்து கொண்டு இருக்க வேண்டும், உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா அவள் பேசியது?
ஒருவேளை நான் நேற்று தூங்காமல் இருந்திருந்தால், மேல் தளத்திற்கு சென்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும், அப்படி சென்றிருந்தால் அந்த கொலையாளி யார் என்று எனக்கு தெரிந்திருக்கும்.
அவள் யூகத்தின் அடிப்படையிலேயே நம்மிடம் பேசி இருக்கிறாள். ஆனால் நடந்ததும் அதுதான்.....
பாவம், அவள் சாவிற்கு அவளே காரணம் ஆகிவிட்டாள்.
அவள் தன் வாயை அடைக்க கொலைகாரனிடம் பணம் எதிர்பார்த்து இருக்கிறாள்....
கொலைகாரனும் தருகிறேன் என்று நம்பிக்கை அளித்து, அவளை தனிமையில் சந்திக்க சொல்லி இருக்கிறான்.
அவள் பணத்தை எண்ணிக் கொண்டு இருந்த சமயம் பார்த்து, அவளை கொன்று விட்டான்!
இந்த கிழிந்த தாளின் மிச்சத்தையும் கொலைகாரன் நிச்சயம் அழித்திருப்பான்.
நான் டாக்டர். ப்ரெஸ்னரை கூப்பிடு- -கிறேன்!



மரணம் வேகமாக ஏற்பட்டுவிட்டது, போராட்டம் ஏதும் இல்லாமல்.
என்ன ஆயுதமாக இருக்கலாம்?
ஒரு சன்னமான, அதே சமயம் கூர்மையான ஆயுதமாக இருக்கலாம்.
ஸ்கால்பெல் மாதிரி ஏதாவது?
என்ன!?
உங்களுடைய அறுவை சிகிச்சைக்கு பயன்படும் சாதனங்கள் அனைத்தும் சரியாக இருக்கிறதா டாக்டர்?
கடைசியில் என்னையே சந்தேகப்படுகிறீர்களா! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், எல்லாம் இங்கே தான் இருக்கிறது!
என்னை இப்படி கேள்வி கேட்பது என் தொழிலையே அவமானப்படுத்துவதற்கு சமம், முதலில் இருவரும் வெளியே செல்லுங்கள்!
நான் மருத்துவ துறையில் சிறந்து விளங்கும் ஒரு நபரை தவறாக எண்ணிவிட்டேன் என்று நினைக்கிறேன் கலோனல் ரேஸ்.
உங்களுக்கு அவர் மீது சந்தேகம் இருக்கிறதா?
எனக்கு கப்பலில் உள்ள அனைவரின் மீதும் சந்தேகம் உள்ளது, நான் இப்பொழுது அதை வடிகட்டிக்கொண்டு இருக்கிறேன்!
தற்சமயம் என் கணக்கில் மூன்று பேர், இரண்டு இளம் வயது நபர்கள், ஒரு வயதான நபர்.



முதல் நபர் கார்நீலியா ராப்சன், காரணம் வஞ்சம், அவள் குடும்பம் சீரழிந்து போக காரணமாக இருந்தது லின்நெட்டின் தந்தை.
அதற்கு வாய்ப்பு கிடையாது, கார்நீலியா இரவு முழுவதும், ஜாக்கியின் அருகில் இருந்திருக்கிறாள், டிம் துப்பாக்கியை எடுக்க வருவதற்குள் அவள் இத்தனையும் செய்திருக்க முடியாது.
இரண்டாவது டிம் ஸ்கூய்லர், அவன் திருடனாக இருக்கும் பட்சத்தில், மிஸ். வான் ஸ்கூய்லர் லின்நெட் அறைக்கு வருவதற்கு முன்பே நகையை மாற்றி வைத்தது அவனாக இருக்கலாம்.
ம்ம்ம்.... வான் ஸ்கூய்லரும் நமக்கு கொலை நடந்த நேரத்தை ஒரு மணி பத்து நிமிடங்கள் என்று சரியாக சொன்னார், அவர் அப்பொழுது தான் எழுந்ததாகவும் சொன்னார்.
அப்படியென்றால் டிம் ஆயுதத்தை எடுத்து இருக்கலாம் தானே?
இருக்கலாம், பிறகு ஜாக்கியை வம்பில் மாட்டி விட "J" என்ற எழுத்தையும் எழுதி இருக்கலாம், ஆனால் இவ்வளவும் செய்த பிறகு அவன் ஏன் ஆயுதத்தை தண்ணீரில் வீசி இருக்க வேண்டும்.
மூன்றாவது நபர், பென்னிங்டன்.
கொலைக்கான காரணம் எனக்கு புரிந்துவிட்டது!!
இடத்துக்கு ஏற்ற மாதிரி நடந்துகொள்வதில் மனுஷன் கெட்டிக்காரர், கோவிலில் அந்த பாறை விழுந்ததில் எனக்கு அவர் மீது தான் சந்தேகம்.
தான் தாமதமாக கோவிலுக்கு சென்றதாக கூறி, அவராகவே வலிய வந்து மாட்டிக்கொண்டார்.
பித்தலாட்டக்காரர், நான் இப்படி சொல்வதற்கு இன்னொரு காரணமும் இருக்கு....
வழியை விடுங்கள்! எனக்கு இதையெல்லாம் செய்தது யார் என்று தெரியும்!
?




COMICS PDF TIMES


பென்னிங்டனின் துப்பாக்கி, கைரேகை எதுவும் இல்லை, அப்படியென்றால்...
டாகடர். ப்ரெஸ்னர்! மிஸ்டர். பென்னிங்டனை பார்த்தீர்களா?
கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அவரை கேளிக்கை அறையில் பார்த்த ஞாபகம்.
இங்கே நடப்பது எல்லாம் அபத்தம்!
சுத்த அபத்தம்!!
சிறிது நேரத்திற்கு பின், கேளிக்கை அறையில்.
நீங்கள் இதற்கு முன் என்னிடம் பொய் சொல்லி இருக்கிறீர்கள், ஏன் நீங்கள் இம்முறை சொல்வதும் பொய்யாக இருந்தால்...
நான் கடந்த அரை மணி நேரமாக இங்கேயே தான் இருக்கிறேன், வேறு யாராவது என்னுடைய துப்பாக்கியை எடுத்து இருக்கலாம், இதை வைத்து எப்படி நீங்கள் என்னை குற்றம் சொல்லலாம்.
அதற்கு?
நீங்கள் "கார்மானியாக்" கப்பலில் வந்ததாக சொன்னீர்கள், ஆனால் உங்களுடைய சாமான்களில் " நார்மண்டி" என்று வேறு கப்பலின் பெயர் பொறிக்கப்பட்டு இருக்கிறது. நார்மண்டி, கார்மனியாக் கிளம்பி இரண்டு நாட்கள் கழித்து கிளம்பிய கப்பல்.
உங்களுக்கு லின்னெட்டின் திருமண செய்தி கிடைத்துள்ளது, அது உங்களுக்கு பொருளாதார ரீதியாக பெரிய இடி!!
அதனால் தான் அன்று கோவிலில் பாறையை உருட்டி அவரை கொல்ல முயற்சி செய்தீர்கள்!
இல்லை!!
கோவிலுக்கு தாமதமாக தான் வந்தேன் என்று நீங்கள் சொன்ன பொழுதே நான் முடிவு செய்துவிட்டேன்.
அங்கே நடந்தது ஒரு விபத்து! என் கால் இடறி நான் விழுந்ததில், அந்த பாறைகள் சரிந்துவிட்டன.


சத்தியாமாக சொல்கிறேன், நான் அவளை கொல்லவில்லை! அவளை கொல்லவில்லை!
அவர் உண்மையை தான் சொல்கிறார்
?
அவருக்கு கொலை செய்வதற்கான எல்லா காரணங்--களும் இருந்தது, ஆனால் அவர் கொலை செய்யவில்லை.
மிஸ்டர். டிம் அல்லர்டன்! கொஞ்சம் உள்ளே வருகிறீர்களா, உங்களிடம் கொஞ்சம் கேள்விகள் கேட்க வேண்டி உள்ளது!!
நானா?!
ஆனால் மிஸ்டர். பாய்ராட்?!
உங்களுடைய கசின் ஜோன்னா சௌத்வூட் பற்றி கொஞ்சம் பேசுவோம், வேறொரு கேஸில் திருட்டு பட்டம் பெற்றவர்...
என்னுடைய கசினுக்கு இப்பொழுது இங்க என்ன வேலை?
ஜோன்னா, லின்னெட்டின் தோழி, அவர் ஏன் அந்த வைர மாலையை இரவல் வாங்கி ஒரு போலியை செய்திருக்க கூடாது?
இந்த விஷயம் லின்னெட்டுக்கு தெரிந்த பின், உண்மை வெளியே தெரியக் கூடாது என்று, நீங்கள் ஏன் அவரை கொலை செய்து இருக்க கூடாது?
அந்த வைர மாலை இப்பொழுது எங்கே? மேலும் அதை வைத்து நான் என்ன செய்திருக்க முடியும்?!
உன்னுடைய ஜபமாலை ரொம்பவே ஆழகாக இருக்கிறது பார், அதுவும் ஒவ்வொரு மணிக்குள்ளும் ஒரு வைரத்தை மறைத்து வைத்துள்ளது!
!


இதை ஒரு பாடமாக எடுத்துக்கொள்!
?
நான் வைரங்களை திருப்பி கொடுத்துவிடுகிறேன், ஆனால் நான் யாரையும் கொலை செய்யவில்லை!
எனக்கு தெரியும்.
என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர். பாய்ராட்? நாம் மீண்டும் முதலில் இருந்தா?!
இல்லை கலோனல்.... ஒரு பதினைந்து நிமிஷம் அவகாசம் கொடுங்கள், இங்கேயே கொலைகாரனை தோலுரித்து காட்டுகிறேன்.
பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு.
முதலில் நான் மிஸஸ். டாயலின் கொலை ஏதோ எதிர்பாராத விதமாக நடந்ததாகத்தான் நினைத்தேன், காரணம் கொலையாளிக்கு பழி மிஸ். ஜாக்கியின் மீது தான் விழும் என்று நன்றாகவே தெரியும்.
?!
?!
!
!
ஆனால் நண்பர்களே, அது அனைத்தும் தவறு! இந்த கொலை ஒரு திட்டமிட்டு செய்யப்பட்ட சதி, ஒவ்வொரு விஷயத்தையும் மிக நுணுக்கமாக திட்டமிட்டு செய்துள்ளார்கள்.



இதற்கு காரணம் நீங்கள் தான் மிஸஸ். அல்லர்டன், இங்கே நீங்கள் மட்டும் தான் வைன் குடிப்பீர்கள் என்று நீங்கள் சொன்ன அந்த ஒற்றை வாக்கியம் தான் என்னை யோசிக்க வைத்தது, எப்பொழுதும் ஒரு கண்ணை திறந்து வைத்துக் கொண்டு தூங்குபவன், நேற்று இரவு கட்டையை போல தூங்கி இருக்கிறேன்.
நானா?
இப்பொழுது ஒவ்வொரு தடயமாக பார்ப்போம், முதலில் புல்லெட் ஓட்டைகள் உடைய ஸ்கார்ப், டாக்டர், மிஸஸ். டாயலின் உடம்பில் வெடி மருந்து இருந்தது தானே?
நிச்சயமாக!!
இந்த ஸ்கார்ப் அப்பொழுது பயன்படுத்தப் படவில்லை, அதனால் இது டாயலை சுடும் பொழுது பயன்படுத்தப்பட்டு உள்ளது, சரிதானே?
இல்லை! அதற்கு நான் சாட்சி!!
அப்படியென்றால் மூன்றாவதாக ஒரு குண்டு சுடப்பட்டு உள்ளது, அடுத்ததாக நான் ஒரு சிகப்பு மை நிறைந்த ஒரு நெயில் பாலிஷ் பாட்டிலை மிஸஸ். டாயலின் அறையில் இருந்து எடுத்தேன்.
அதில் இருந்த சிகப்பு மையும், நமக்கு துப்பிக்கியுடன் கிடைத்த ஸ்கார்ப்பில் இருந்த சிகப்பு மையைப் போலவே படரி இருந்தது!
!?
எனக்கு ஆரம்பத்தில் இருந்தே ஒரு சந்தேகம் இருந்தது, பிறகு கொலைகாரனை மிரட்டியதால் தான் லூசி கொலை செய்யப்பட்டாள் என்று தெரிந்தவுடன் அதை உறுதி செய்து விட்டேன்.
நான் அவளை சைமன் டாயலின் அறையில் வைத்து கேள்வி கேட்ட பொழுது, அவள் பதில்கள் எனக்கு வித்தியாசமாக பட்டது, காரணம் அவள் பதில்கள் கொலைகாரனை எச்சரித்துக் கொண்டு இருந்தது.
அந்த அறையில் அப்பொழுது கலோனல், மிஸ்டர். டாயல் மற்றும் என்னை தவிர அங்கே யார் இருந்தார்? டாக்டர். ப்ரெஸ்னர்.
என்ன!?
பிறகு லூசியை கொல்ல பயன்படுத்தப்பட்ட ஆயுதம் என்ன? ஒரு ஸ்கால்பெல்!
என்ன ஒரு முட்டாள் தனமான அனுமானம், இதை நான் முற்றிலுமாக எதிர்க்கிறேன்!!


கொஞ்சம் அமைதியாக இருங்கள் டாக்டர், உங்களை ஒன்றும் நான் குற்றம் சொல்லவில்லை, லூசி உங்களை எச்சரிக்க வேண்டும் என்றால், அவள் அதை தனிமையில் செய்து இருக்கலாம்.
நான் சொல்வது முழு நேரமும் மருத்துவ கண்காணிப்பில் இருந்த சைமன் டாயலை, கலோனல் லூசியிடம் “உன் பாதுகாப்பை நான் உறுதி படுத்துகிறேன்” என்று நீங்கள் சொன்னது நினைவிருக்--கிறதா?
கால் உடைந்த நிலையில் ஒரு மனிதனால் தன் மனைவி மற்றும் பணிப்பெண்ணை எப்படி கொலை செய்ய முடியும்.
முடியாது தான், ஆனால் ஜாக்கியால் முடியும்!
சைமன் என்னை பார்க்க சம்மதித்துவிட்டார், சைமன் என்னை மன்னித்துவிட்டார், இப்பொழுது தான் எனக்கு நிம்மதி.
இல்லை!
ஆமாம், சைமனுக்கு அலிபி கிடைக்க உங்களுடைய துப்பாக்கியால் சுட்டது நீங்கள் தான். உங்களுக்கு அலிபி கிடைக்க இரவு முழுவதும் ஒரு நபரை உங்கள் அருகிலேயே இருக்க ஏற்பாடு செய்தது சைமன்.
இப்பொழுது அனைத்தையும் கோர்வையாக பாப்போம்.



ஜாக்கி சுட்டது மேஜையை, அதற்கு ஏற்றார் போல் சிகப்பு மை தோய்ந்த கைக்குட்டையை தான் காலில் போட்டுக்கொண்டு சைமன் அலறினார்.
டுமீல்!!
ஆஹ்!
டொக்
ஆஹ்!
உதவி! உதவி!
ஜாக்கி செய்த களேபரம், சைமனுக்கு நேரத்தை ஏற்படுத்தி தந்தது.
டாயலுக்கு.தேவை வெறும் ஐந்து நிமிட அவகாசம், துப்பாக்கியை எடுத்து தன் மனைவியை கொலை செய்ய.
தடதடா
டமார்
டுமீல்!!
டுமீல்!!



பிறகு இரண்டாவதாக ஒரு குண்டு சுடப்பட்டது, இம்முறை சத்தம் வராமல் இருக்க ஸ்கார்ப் பயன்படுத்த பட்டது, சரிதானே மிஸ்டர். பாய்ராட்?
சரியாக சொன்னீர்--கள், கலோனல்!
இம்முறை டாயல், பிரச்னை கூடாது என்பதற்காக தன்னையே பணயம் வைத்தான்...
டுப்!
தபார்
அப்பொழுது என் அம்மாவை கொன்றது யார் மிஸ்டர். பாய்ராட்?
அவர் ஒரு தவிர்க்க முடியாத பலியாகி விட்டார், அவர் போட்ட கூப்பாடு ஜாக்கியை எச்சரித்து விட்டது, அவருக்கு துப்பாக்கி....
அதற்கு காரணம் நான் தான், முந்திரிகொட்டையை போல பென்னிங்கடன் அறையில் கிடைத்த துப்பாக்கியை பற்றி நான் தான் அவரிடம் உளறிவிட்டேன்.
அவருக்கு அந்த நேரத்தில் அதை தவிர வேறு வழி தெரியவில்லை...
இது எதுவும் உண்மை இல்லை! நான் நம்பமாட்டேன்! சைமன்!!
உங்களுடைய கற்பனை திறன் அபாரம் மிஸ்டர். பாய்ராட், ஆனால் இது எதுவும் கோர்ட்டில் செல்லுபடி ஆகாது.
ச்சு... ச்சு...
மேடம், உங்கள் அனைவரையும் இங்கே அழைப்பதற்கு முன்னால். நான் சைமனிடம் வாக்குமூலம் வாங்கிவிட்டு தான் வருகிறேன், அவர் அனைத்தையும் ஒப்புக்கொண்டு விட்டார்!
இல்லை! நான் உங்களை நம்பமாட்--டேன்!


நான் சைமனை
மனதார நேசித்தேன்..
எனக்கு காதல் மட்டும் போதுமானதாக இருந்தது, ஆனால் சைமனுக்கு பணமும் தேவைப்பட்டது.
லின்நெட்டுக்கு சைமனை என்னிடம் இருந்து பிரிப்பதற்கு எந்த எண்ணமும் கிடையாது, இதுதான் உண்மை.
COMICS PDF TIMES
என்னை மன்னித்து விடு டியர்... நான் காரியத்தை மொத்தமாக கெடுத்துவிட்டேன்...
உன்னை ஒருபோதும் மன்னிக்க மாட்டேன் சைமன்!!
டுமீல்!!
டுமீல்!!
டுமீல்!!
இவளுக்கு இன்னொரு துப்பாக்கி எங்கிருந்து கிடைத்தது?
அவளிடம் ஆரம்பம் முதலே இரண்டு இருந்திருக்கிறது. நாம் ரோசாலியின் அறையை சோதனை போட்ட பிறகு அங்கே மறைத்து வைத்துவிட்டாள்.
மிஸ்டர். பாய்ராட், இவளை இப்படியே விட்டு விட போகிறீர்களா?
நிச்சயம் கிடையாது, ஆனால் இவளை முதன் முதலில் நான் லண்டனில் பார்த்தபொழுதே இவளுடைய விதி இதுதான் என்று தீர்மானித்து விட்டேன். அளவுக்கு மீறிய காதல் எப்பொழுதும் சோகத்தில் தான் முடியும்.

சுபம்



COMICS PDF TIMES

அகதா கிறிஸ்டி

# நைல் நதியில் ஒரு கொலை

